கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:24.01.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## "பராக்ரம் திவாஸ்"

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஜெயந்தியான "பராக்ரம் திவாஸ்" (வீர நாள்) நிகழ்வை நேதாஜியின் அஞ்சாத தலைமைக்கு மரியாதை செலுத்தும் நோக்கத்துடன் 23.01.2024 அன்று ஏற்பாடு செய்தது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில் அவையோரை வரவேற்று இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை விவரித்தார். அதைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்கள் முன்னாள் IAF திரு.கருணாகரன் மற்றும் லெப்டினன்ட் கர்னல் (ஓய்வு) சதீஷ் விஸ்வநாதன், ஜன கல்யாண் சேவாஷ்ரம், கோவை ஆகியோர் தேச பக்தி மற்றும் நாட்டின் அர்ப்பணிப்பு, நேதாஜியின் வாழ்க்கை சித்தாந்தம் மற்றும் சுதந்திரப் போராட்டத்தில் அவரது பங்கு பற்றி வளர்ந்து வரும் தலைமுறையினருக்கு உத்வேகம் மற்றும் ஊக்கமளிக்கும் வகையில் உரையை வழங்கினர். இணை பேராசிரியை முனைவர் பி.எஸ்.கவிதா விழாவிற்கு வாழ்த்துரை வழங்கினார் மற்றும் இணை பேராசிரியர் முனைவர் கே.கணேசன் நன்றியுரையுடன் கூட்டத்தை இனிதே நிறைவு செய்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**